# பாவமன்னிப்புத் துஆக்கள்

அல்குர்ஆன், ஸுன்னா அடிப்படையிலான
ஆதாரப்பூர்வமான தொகுப்பு



جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبــر

# பொருளடக்கம்


**பகுதி - 1**

**பாவமன்னிப்புக் கேட்பதின் சிறப்புகள்**

**பகுதி - 2**

**திருக்குர்ஆனில் உள்ள பாவமன்னிப்புத் துஆக்கள்**

**பகுதி - 3**

**ஹதீஸ்களில் உள்ள பாவமன்னிப்புத் துஆக்கள்**
**- தொழுகையில் நபி(ﷺ) அவர்கள் ஓதியவை**

**பகுதி - 4**

**ஹதீஸ்களில் உள்ள பாவமன்னிப்புத் துஆக்கள்**
**- பொதுவான சந்தர்ப்பங்களில் நபி(ﷺ) அவர்கள் ஓதியவை**


தொகுப்பு

**அல்கோபார் அழைப்பகம்,**

தமிழ்ப் பிரிவு

# பகுதி - 1

# பாவமன்னிப்புக் கேட்பதின் சிறப்புகள்

# பாவமன்னிப்புக் கேட்பதின் சிறப்புகள்

1

என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய ரஹ்மத்தில் அவர் நம்பிக்கையிழக்க வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன், மிகக் கருணையுடையவன்' (என்று நபியே!) நீர் கூறுவீராக !

அல்குர்ஆன் 39:53

# பாவமன்னிப்புக் கேட்பதின் சிறப்புகள்

2

தவிர, மானக் கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ) காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள். அத்தகையோருக்கு உரிய (நற்)கூலி, அவர்களுடைய இறைவனிடமிருந்து மன்னிப்பும், சுவனபதிகளும் ஆகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டே இருக்கும். அவர்கள் அங்கே என்றென்றும் இருப்பர். இத்தகைய காரியங்கள் செய்வோரின் கூலி நல்லதாக இருக்கிறது.

அல்குர்ஆன் 3:135,136

# பாவமன்னிப்புக் கேட்பதின் சிறப்புகள்

3

நிச்சயமாக அல்லாஹ் தன்
அடியாளர்களிடம் இருந்து
தவ்பாவை  மன்னிப்புக் கோருதலை
ஒப்புக் கொள்கிறான் என்பதையும்,
தர்மங்களை அங்கீகரிக்கிறான்
என்பதையும் அவர்கள்
அறியவில்லையா? மெய்யாகவே
அல்லாஹ் தவ்பாவை ஏற்று
அருள் புரிபவன்.

அல்குர்ஆன் 9:104

# பாவமன்னிப்புக் கேட்பதின் சிறப்புகள்

4

## அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

மக்களே! அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள். ஏனெனில், நான் ஒவ்வொரு நாளும் அவனிடம் நூறுமுறை பாவமன்னிப்புக் கோருகிறேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5235

# பாவமன்னிப்புக் கேட்பதின் சிறப்புகள்

5

ஒரு மனிதன் (பயணத்தினிடையே ஓய்வெடுப்பதற்காக) ஆபத்துகள் நிறைந்த (வறண்ட) பாலை வனத்தில் (இறங்கி) உறங்கினான். அவனுடன் அவனது வாகன(மான ஒட்டக)மும் இருந்தது. அதில் அவனுடைய உணவும் நீரும் இருந்தன. அவன் (உறங்கிவிட்டு) விழித்தெழுந்தபோது, அவனது ஒட்டகம் (தப்பியோடிப்) போயிருந்தது. அவன் அதைத் தேடிச் சென்றபோது, அவனுக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டது. அவன், ‘நான் முன்பிருந்த இடத்திற்கே திரும்பிச் சென்று சாகும்வரை உறங்கப்போகிறேன்” என்று கூறியபடி (அங்கு திரும்பிச் சென்று) தனது கொடுங்கையில் தலை வைத்துச் சாகும்வரை உறங்கப் போனான்.

பிறகு (திடீரென) அவன் விழித்துப் பார்த்த போது, அவனுக்கருகில் அவனது ஒட்டகம் இருந்தது. அதில் அவனது பயண உணவும் நீரும் இருந்தன. அப்போது அவன் தனது ஒட்டகத்தாலும் உணவாலும் அடைகின்ற மகிழ்ச்சியைவிட, இறைநம்பிக்கையுள்ள அடியார் பாவ மன்னிப்புக் கோரி மீட்சி பெறுவதால் அல்லாஹ் அதிகம் மகிழ்கின்றான்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி), முஸ்லிம் 5296

# பகுதி - 2

# திருக்குர்ஆனில் உள்ள பாவமன்னிப்புத் துஆக்கள்

அரபி மூலம், ஒலி பெயர்ப்பு,
மொழிபெயர்ப்பு,
மற்றும் வசன எண் குறிப்புகள்
உடனான தொகுப்பு

# பாவமன்னிப்புத் துஆக்கள் 1

## நபிமார்கள் மற்றும் ரிப்பிய்யூன்கள் கேட்ட துஆ

رَبَّنَا اغْفِرْلَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْٓ اَمْرِنَا

وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

ரப்பனக்( غ )பி(ف)ர்லனா துனூபனா வஇஸ்ராப(ف)னா

பீ(ف) அம்ரினா வஸ(ث)ப்பித் அக்தாமனா

வன்சு(ص)ர்னா அலல் கவ்மில் காபி(ف)ரீன்

எங்கள் இறைவனே! எங்கள் பாவங்களையும் எங்கள் காரியங்களில் நாங்கள் வரம்பு மீறிச் செய்தவற்றையும் மன்னித் தருள்வாயாக! எங்கள் பாதங்களை உறுதியாய் இருக்கச் செய்வாயாக! காஃபிர்களின் கூட்டத்தாருக்கு எதிராக எங்களுக்கு நீ உதவி புரிவாயாக"

திருக்குர்ஆன் 3: 147

# பாவமன்னிப்புத் துஆக்கள் 2

## ஆதம்(அலை) மற்றும் ஹவ்வா(அலை) அவர்கள் இருவரும் கேட்ட துஆ

رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا
وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

ரப்பனா ளலம்னா அன்புஸனா வஇல்லம் தங்பிர்லனா வதர்ஹம்னா லநகூனன்ன மினல் காஸிரீன்

எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம் – நீ எங்களை மன்னித்துக் கிருபை செய்யாவிட்டால், நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்

திருக்குர்ஆன் 7:23

# பாவமன்னிப்புத் துஆக்கள் 3

## யூனுஸ்(அலை) அவர்கள் கேட்ட துஆ

لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ سُبْحٰنَكَ
اِنِّىْ كُنْتُ مِنَ الظّٰلِمِيْنَ

லா இலாஹ இல்லா அன்த்த சுப்ஹானக்க
இன்னீ குன்த்து மினழ் ழாலிமீன்

உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் யாருமில்லை; நீ மிகவும் தூய்மையானவன்; நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் ஒருவனாகி விட்டேன்

திருக்குர்ஆன் 21:87

# பாவமன்னிப்புத் துஆக்கள் 4

## இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆ

رَبِّ اجْعَلْنِىْ مُقِيْمَ الصَّلٰوةِ

وَمِنْ ذُرِّيَّتِىْ ۖ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ ﴿٤٠﴾ رَبَّنَا اغْفِرْ لِىْ

وَلِوَالِدَىَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ ﴿٤١﴾

ரப்பிஜ்அல்னீ முகீமஸ் ஸலாத்தி வமின் துர்ரியத்தி ரப்பனா வதகப்பல் துஆ

ரப்பனஃபிர்லீ வலிவாலிதய்ய வலில் முஃமினீன யவ்ம யகூமுல் ஹிஸாப்

‘(என்) இறைவனே! தொழுகையை நிலைநிறுத்துவோராக என்னையும், என்னுடைய சந்ததியில் உள்ளோரையும் ஆக்குவாயாக! எங்கள் இறைவனே! என்னுடைய பிரார்த்தனையையும் ஏற்றுக் கொள்வாயாக!”

“எங்கள் இறைவா! என்னையும், என் பெற்றோர்களையும், முஃமின்களையும் கேள்வி கணக்குக் கேட்கும் நாளில் மன்னிப்பாயாக !”

திருக்குர்ஆன் 14:40,41

# பாவமன்னிப்புத் துஆக்கள் 5

## மூஸா(அலை) அவர்கள் கேட்ட துஆ

أَنْتَ وَلِيُّنَا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا

وَأَنْتَ خَيْرُ الْغَافِرِينَ

அந்த வலிய்யுனா ப(ف)க்(غ)பி(ف)ர்லனா
வர்ஹம்னா வஅந்த
கை(خ)ருல் கா(غ)பி(ف) ரீன்

நீ தான் எங்களுடைய பாதுகாவலன். ஆகவே எங்களுக்கு மன்னிப்பு அளிப்பாயாக ! எங்களுக்கு கிருபை செய்வாயாக ! மன்னிப்பவர்களில் எல்லாம் நீ தான் மிக்க மேன்மையானவன் !

திருக்குர்ஆன் 7:155

# பாவமன்னிப்புத் துஆக்கள் 6

## மூஸா(அலை) அவர்கள் கேட்ட துஆ

رَبِّ اِنِّىۡ ظَلَمۡتُ نَفۡسِىۡ فَاغۡفِرۡ لِىۡ

ரப்பி இன்னி ள(dh)லம்து
நப்(f)ஸி பஃபி(f)ர்லி

என் இறைவா! நிச்சயமாக நான் என்
ஆத்மாவுக்கே அநியாயம் செய்து விட்டேன்;
ஆகவே, நீ என்னை மன்னிப்பாயாக!

திருக்குர்ஆன் 28:16

# பாவமன்னிப்புத் துஆக்கள் 7

## நபி(ﷺ) அவர்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்ட துஆ

رَّبِّ اغْفِرْ وَارْحَمْ وَأَنْتَ خَيْرُ الرَّاحِمِيْنَ

ரப்பிஃபி(f)ர் வர்ஹம் வ அன்(த்)த ஹைருர் ராஹிமீன்.

என் இறைவனே! நீ என்னை மன்னித்துக் கிருபை செய்வாயாக! நீ தான் கிருபையாளர்களிலெல்லாம் மிக்க மேலானவன்

திருக்குர்ஆன் 23: 118

# பாவமன்னிப்புத் துஆக்கள் 8

## தக்வா உடைய அடியார்களின் பிரார்த்தனை

رَبَّنَآ اِنَّنَآ اٰمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا
وَقِنَا عَذَابَ النَّارِ ۚ

ரப்பனா இன்னனா ஆமன்னா
ப(f)ஃபி(f)ர்லனா துனுபனா
வகீனா அதாபன்னார்

எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் (உன் மீது) நம்பிக்கை கொண்டோம்; எங்களுக்காக எங்கள் பாவங்களை மன்னித்தருள் செய்வாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக!

திருக்குர்ஆன் 3: 16

# பாவமன்னிப்புத் துஆக்கள் 9

## நல்லடியார்களின் துஆ

رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَكَفِّرْ عَنَّا
سَيِّاٰتِنَا وَتَوَفَّنَا مَعَ الْاَبْرَارِ ۚ

ரப்பனா பஃபிர்லனா துனுபனா வ கப்(f)பிர் அன்னா
ஸய்யிஆத்தினா வ தவப்(f)பனா மஅல் அப்ரார்

எங்கள் இறைவனே! எங்களுக்கு, எங்கள்
பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள்
தீமைகளை எங்களை விட்டும்
அகற்றி விடுவாயாக ! இன்னும், எங்களைச்
சான்றோர்களுடன் கைப்பற்றுவாயாக!

திருக்குர்ஆன் 3: 193

# பாவமன்னிப்புத் துஆக்கள் 10

## நல்லடியார்களின் துஆ

رَبَّنَآ اٰمَنَّا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَاَنْتَ خَيْرُ الرّٰحِمِيْنَ

ரப்பனா ஆமன்னா ப(f)ஃபி(f)ர்லனா வர்ஹம்னா வ அன்(த்)த ஹைருர் ராஹிமீன்

எங்கள் இறைவா! நாங்கள் உன் மீது ஈமான் கொள்கிறோம்; நீ எங்கள் குற்றங்களை மன்னித்து, எங்கள் மீது கிருபை செய்வாயாக! கிருபையாளர்களிலெல்லாம் நீ மிகவும் மேலானவன்

திருக்குர்ஆன் 23: 109

# பாவமன்னிப்புத் துஆக்கள் 11

## நல்லடியார்களின் துஆ

رَبَّنَآ اَتْمِمْ لَنَا نُوْرَنَا وَاغْفِرْ لَنَا
اِنَّكَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

ரப்பனா அத்மிம்லனா நுவ்ரனா
வக்(gh)பி(f)ர்லனா இன்னக அலா
குல்லி ஷைய்இன் கதீர்

எங்கள் இறைவா! எங்களுக்கு, எங்களுடைய
பிரகாசத்தை நீ முழுமையாக்கி வைப்பாயாக!
எங்களுக்கு மன்னிப்பும் அருள்வாயாக!
நிச்சயமாக நீ எல்லாப் பொருட்கள்
மீதும் பேராற்றலுடையவன்

திருக்குர்ஆன் 66:8

# பகுதி - 3

# ஹதீஸ்களில் உள்ள பாவமன்னிப்புத் துஆக்கள்

## தொழுகையில் நபி(ﷺ) அவர்கள் ஓதியவை

**அரபி மூலம், ஒலி பெயர்ப்பு, மொழிபெயர்ப்பு, அறிவிப்பாளர், ஹதீஸ் நூல் மற்றும் ஹதீஸ் எண் குறிப்புகள் உடனான தொகுப்பு**

# பாவமன்னிப்புத் துஆக்கள் 1

## நபி(ﷺ) அவர்கள் தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் கேட்ட பாவமன்னிப்பு துஆ

اللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ، اللَّهُمَّ نَقِّنِي مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ، اللَّهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ

அல்லாஹும்ம பாயித் பைனி வ பைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல் மக்(غ)ரிப். அல்லாஹும்ம நக்கினி மினல் கதாயா கமா யுனக்கஸ் ஸ(ث)வ்புல் அப்யலு மினத் தனஸ். அல்லாஹும் மக்(غ)ஸில் கதாயாய பில்மாயி வஸ்ஸ(ث)ல்ஜி வல்பரத்

இறைவா! கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே நீ ஏற்படுத்திய தூரத்தைப் போல், எனக்கும் தவறுகளுக்கும் இடையே நீ தூரத்தை ஏற்படுத்துவாயாக! இறைவா! வெண்மையான ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப்படுத்தப் படுவது போல் என் தவறுகளை விட்டும் என்னைத் தூய்மைப் படுத்துவாயாக! தண்ணீராலும் பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளைக் கழுவுவாயாக!

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி) அவர்கள், புகாரி 744

# பாவமன்னிப்புத் துஆக்கள் 2

## நபி(ﷺ) அவர்கள் ருகூ மற்றும் ஸஜ்தாவில் கேட்ட பாவமன்னிப்பு துஆ

سُبْحَانَكَ اللَّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ
اللَّهُمَّ اغْفِرْ لِي

சுப்ஹானகல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக
அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லி

இறைவா! எங்கள் அதிபதியே! உன்னைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன். இறைவா! எனக்கு மன்னிப்பளிப்பாயாக!

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 794

# பாவமன்னிப்புத் துஆக்கள் 3

## ருகூவிலும், ஸஜ்தாவிலும்

## நபி(ﷺ) அவர்கள் ஓதிய பாவமன்னிப்பு துஆ

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهِ أَسْتَغْفِرُ اللّٰهَ وَأَتُوبُ إِلَيْهِ

சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி

அஸ்தக்(غ)பி(ف)ருல்லாஹ வ அதூபு இலைஹி

லாஹ் மிகத் தூயவன் எனப் புகழ்ந்தவனாய்
அவனைத் துதிக்கிறேன். அல்லாஹ்விடம்
பாவமன்னிப்புக் கோரி மீளுகிறேன்

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 837

# பாவமன்னிப்புத் துஆக்கள் 4

## நபி(ﷺ) அவர்கள் ஸஜ்தாவில் கேட்ட பாவமன்னிப்பு துஆ

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ ذَنْبِيْ كُلَّهُ
دِقَّهُ وَجِلَّهُ وَأَوَّلَهُ وَاٰخِرَهُ وَعَلَانِيَتَهُ وَسِرَّهُ

அல்லாஹும் மஃபிர்லீ தன்பீ குல்லஹு,
திக்கஹு வ ஜில்லஹு, வ அவ்வலஹு
வ ஆகிரஹு, வ அலானிய்ய(த்)தஹு வ ஸிர்ரஹு

இறைவா! என் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! அவற்றில் சிறியதையும் பெரியதையும்,ஆரம்பமாகச் செய்ததையும் இறுதியாகச் செய்ததையும், வெளிப்படையாகச் செய்ததையும் மறைமுகமாகச் செய்ததையும் மன்னிப்பாயாக.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி) அவர்கள், முஸ்லிம் 833

# பாவமன்னிப்புத் துஆக்கள் 5

## நபி(ﷺ) அவர்கள் ஸஜ்தாவில் கேட்ட பாவமன்னிப்பு துஆ

سُبْحَانَكَ اللَّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ
اللَّهُمَّ اغْفِرْ لِي

சுப்ஹானகல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக
அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லி

**இறைவா! எங்கள் அதிபதியே! உன்னைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன். இறைவா! எனக்கு மன்னிப்பளிப்பாயாக!**

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 794

# பாவமன்னிப்புத் துஆக்கள் 6

## நபி(ﷺ) அவர்கள் தொழுகையின் இரு ஸஜ்தாக்களுக்கு இடையே உள்ள இருப்பில் கேட்ட பாவமன்னிப்பு துஆ

رَبِّ اغْفِرْ لِي وَارْحَمْنِي وَاجْبُرْنِي
وَارْزُقْنِي وَارْفَعْنِي

ரப்பிக்(غ)பி(ف)ர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ
வர்ஸு(ز)க்னீ வர்ப(ف)ஃனீ

என் இறைவனே! என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள் புரிவாயாக! எனக்கு ஆறுதல் அளித்திடுவாயாக! எனக்கு ரிஸ்கை வழங்குவாயாக! என்னை உயர்த்திடுவாயாக!

இப்னுமாஜா 898

# பாவமன்னிப்புத் துஆக்கள் 7

## நபி(ﷺ) அவர்கள் தொழுகையின் இறுதி இருப்பில் கேட்ட பாவமன்னிப்பு துஆ

اللَّهُمَّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي ظُلْمًا كَثِيرًا ،
وَلَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ فَاغْفِرْ لِي مَغْفِرَةً مِنْ
عِنْدِكَ وَارْحَمْنِي إِنَّكَ أَنْتَ الْغَفُورُ الرَّحِيمُ

அல்லாஹும்ம இன்னீ ழ(ظ)லம்து நப்(ف)ஸீ ழு(ظ)ல்மன் கஸீ(ث)ரன். வலா யக்(غ)பி(ف)ருத் துனூப இல்லா அன்த. ப(ف)க்(غ)பி(ف)ர்லீ மக்(غ)பி(ف)ரதம் மின் இன்திக வர்ஹம்னீ. இன்னக அன்தல் க(غ)பூ(ف)ருர் ரஹீம்

’இறைவா! எனக்கு நான் பெருமளவு அநீதி இழைத்து விட்டேன். உன்னைத் தவிர பாவங்களை எவரும் மன்னிக்க முடியாது. எனவே மன்னிப்பு வழங்குவாயாக! மேலும் எனக்கு அருள் புரிவாயாக! நிச்சயமாக நீ மன்னிப்பவனும் அருள் புரிபவனுமாவாய்.

அறிவிப்பாளர்: அபூபக்ர்(ரலி) அவர்கள, புகாரி 834, 6326

# பாவமன்னிப்புத் துஆக்கள் 8

## நபி(ﷺ) அவர்கள் தொழுகையின் இறுதி இருப்பில் கேட்ட பாவமன்னிப்பு துஆ

اللَّهُمَّ اغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ وَمَا أَسْرَفْتُ وَمَا أَنْتَ أَعْلَمُ بِهِ مِنِّي أَنْتَ الْمُقَدِّمُ وَأَنْتَ الْمُؤَخِّرُ لَا إِلَهَ إِلَّا أَنْتَ

அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ மா கத்தம்து, வ மா அஹ்(خ)ஹர்து வமா அஸ்ரர்து வமா அஃலன்து, வமா அஸ்ரப்(ف)து வமா அன்த அஃலமு பிஹி மின்னி அன்தல் முகத்திமு வ அன்தல் முஅஹ்(خ)ஹிரு லா இலாஹ இல்லா அன்த

நான் முந்திச் செய்ததையும், பிந்திச் செய்வதையும், நான் இரகசியமாகச் செய்ததையும், வெளிப்படையாகச் செய்ததையும், நான் வரம்பு மீறி நடந்து கொண்டதையும், என்னிடமிருந்து எதை நீ அறிந்து வைத்துள்ளாயோ அதையும் மன்னிப்பாயாக. நீயே முற்படுத்துபவன். நீயே பிற்படுத்துபவன். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை.

அறிவிப்பாளர்: அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1419

# பாவமன்னிப்புத் துஆக்கள் 9

## நபி(ﷺ) அவர்கள் தொழுகையின் இறுதி இருப்பில் கேட்ட பாவமன்னிப்பு துஆ

رَبِّ اغْفِرْ لِي خَطِيئَتِي وَجَهْلِي وَإِسْرَافِي فِي أَمْرِي كُلِّهِ وَمَا أَنْتَ أَعْلَمُ
بِهِ مِنِّي اللَّهُمَّ اغْفِرْ لِي خَطَايَايَ وَعَمْدِي وَجَهْلِي وَهَزْلِي وَكُلُّ ذَلِكَ
عِنْدِي اللَّهُمَّ اغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا
أَعْلَنْتُ أَنْتَ الْمُقَدِّمُ وَأَنْتَ الْمُؤَخِّرُ وَأَنْتَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

ரப்பிக்(غ)பி(ف)ர்லீ க(خ)தீஅதீ, வ ஜஹ்லீ, வ இஸ்ராபி(ف) பீ(ف) அம்ரீ குல்லிஹி, வமா அன்த அஃலமு பிஹி மின்னீ, அல்லாஹும்மக்(غ)பி(ف) ர்லீ க(خ)தாயாய, வ அம்தீ, வ ஜஹ்லீ, வ ஜத்தீ வ குல்லு தாலிக இந்தீ. அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ மா கத்தம்து, வ மா அஹ்(خ)ஹர்து வமா அஸ்ரர்து வமா அஃலன்து, அன்தல் முகத்திமு, வ அன்தல் முஅஹ்(خ)ஹிரு, வ அன்த அலா குல்லி ஷையின் கதீர்.

என் இறைவா! என் குற்றங்களையும், என் அறியாமையையும், என் செயல்கள் அனைத்திலும் நான் மேற்கொண்ட விரயத்தையும் மன்னித்திடுவாயாக. மேலும், என்னை விட நீ எவற்றையெல்லாம் அறிந்துள்ளாயோ அவற்றையும் மன்னித்திடுவாயாக. இறைவா! நான் தவறுதலாகச் செய்ததையும், வேண்டுமென்றே செய்ததையும், அறியாமல் செய்ததையும், அறிந்து செய்ததையும் மன்னித்திடுவாயாக. இவை யாவும் என்னிடம் இல்லாமலில்லை. இறைவா! நான் முன்னால் செய்ததையும், பின்னால் செய்ததையும், இரகசியமாகச் செய்ததையும் பகிரங்கமாகச் செய்ததையும் மன்னித்திடுவாயாக. நீயே முன்னேற்றம் அடையச் செய்பவன். பின்னடைவு ஏற்படச் செய்பவனும் நீயே! நீ அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவன்

அறிவிப்பாளர்: அபூ மூஸா(ரலி) அவர்கள், புகாரி 6398

# பகுதி - 4

# ஹதீஸ்களில் உள்ள பாவமன்னிப்புத் துஆக்கள்

## பொதுவான சந்தர்ப்பங்களில் நபி(ﷺ) அவர்கள் ஓதியவை

அரபி மூலம், ஒலி பெயர்ப்பு, மொழிபெயர்ப்பு, அறிவிப்பாளர், ஹதீஸ் நூல் மற்றும் ஹதீஸ் எண் குறிப்புகள் உடனான தொகுப்பு

# பாவமன்னிப்புத் துஆக்கள் 1

## ஸய்யிதுல் இஸ்திஃபார்

اَللّٰهُمَّ اَنْتَ رَبِّي، لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ

**அல்லாஹும்ம அன்த்த ரப்பீ லாயிலாஹ இல்லா அன்(த்)த,**

இறைவா! நீயே என் எஜமான். உன்னைத் தவிர வணக்கத்திற்கு உரியவன் யாருமில்லை.

خَلَقْتَنِي وَاَنَا عَبْدُكَ،

**கலக்தனீ வஅனா அப்துக,**

என்னை நீயே படைத்தாய். நான் உனது அடிமை.

وَاَنَا عَلٰى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ

**வஅனா அலா அஹ்திக வவஃதிக மஸ்ததஃது,**

உனது உடன்படிக்கையின்படியும் வாக்குறுதியின் படியும் என்னால் இயன்ற வரை நடப்பேன்.

اَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ

**அவூது பிக மின்ஷர்ரி மா ஸனஃது,**

நான் செய்த தீமையை விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

اَبُوْءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ، وَاَبُوْءُ بِذَنْبِي

**அபூவு லக பி நிஃமதிக அலய்ய, வஅபூவு பிதன்ம்பீ,**

நீ எனக்குச் செய்த அருளோடும் நான் செய்த பாவத்தோடும் உன்னிடம் மீள்கிறேன்.

فَاغْفِرْ لِي

**ப[F]ஃபி[F]ர்லீ,**

எனவே என்னை மன்னிப்பாயாக!

فَاِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوبَ اِلَّآ اَنْتَ

**ப[F]இன்னஹு லா யஃபிருத் துனூப இல்லா அன்த.**

நிச்சயமாக உன்னைத் தவிர யாரும் பாவங்களை மன்னிக்க முடியாது.

**அறிவிப்பாளர் : ஷத்தாத் இப்னு அவ்ஸ்(ரலி) அவர்கள், புகாரி 6306**

# பாவமன்னிப்புத் துஆக்கள் 2

أَسْتَغْفِرُ اللَّهَ الَّذِي لَا إِلَهَ

إِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّومُ وَأَتُوبُ إِلَيْهِ

**அஸ்தஃஃபிருல்லா ஹல்லதீ லா இலாஹ**
**இல்லாஹுவல் ஹய்யுல் கய்யூம் வ அதூபு இலைஹி.**

அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகிறேன், அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை, அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன், என்றென்றும் நிலைத்திருப்பவன். மேலும் அவன் பக்கமே பாவமன்னிப்பு கோரி மீள்கிறேன்.

## சிறப்பு

யார் இந்த துஆவை ஓதுகிறாரோ, அவர் போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடியிருந்தாலும் அவருக்கு மன்னிப்பு அளிக்கப்படும் என்று அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

**அறிவிப்பாளர் : ஜைத்(ரலி) அவர்கள், அபூதாவூத் 1517**

# பாவமன்னிப்புத் துஆக்கள் 3

## லைலத்துல் கத்ரில் ஓத
## நபி(ﷺ) அவர்கள் ஆயிஷா(ரலி) அவர்களுக்கு
## கற்றுத் தந்த பாவமன்னிப்பு துஆ

اَللّٰهُمَّ إِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّي

அல்லாஹும்ம இன்னக்க அஃபுவுன்
துஹிப்புல் அஃப்வ ஃபஃபு அன்னீ

இறைவா ! நீ மன்னிப்பவன். மன்னிப்பையே
விரும்புபவன். எனவே என்னுடைய
பாவங்களை மன்னித்தருள்வாயாக!

திர்மிதீ 3435, அஹ்மத் 25168

# பாவமன்னிப்புத் துஆக்கள் 4

## நபி(ﷺ) அவர்கள் கேட்ட துஆ

رَبِّ اغْفِرْ لِي خَطِيئَتِي يَوْمَ الدِّينِ

ரப்பிஃபிர்லி ஹ(خ)தீஅதீ யவ்முத் தீனி

எனது நாயனே! நியாயத் தீர்ப்பு நாளில் எனது தவறுகளை மன்னிப்பாயாக

அறிவிப்பவர் ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 214

# பாவமன்னிப்புத் துஆக்கள் 5

## நபி(ﷺ)அவர்கள் கேட்ட துஆ

اَللّٰهُمَّ اغْفِرْ لَنَا وَارْحَمْنَا، وَتُبْ عَلَيْنَا، إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيمُ

அல்லாஹும்மக்(ğ)பிர்லனா வர்ஹம்னா வதுப அலைனா இன்னக அன்த்த தவ்வாபுர் ரஹீம்

யா அல்லாஹ் எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரிவாயாக. எங்களை(க் கருணையுடன் நோக்கி எங்கள் பிழைகளை) மன்னிப்பாயாக. நிச்சயமாக நீயே மிக்க மன்னிப்போனும், அளவிலா அன்புடையோனாகவும் இருக்கின்றாய்.

அறிவிப்பவர்: கப்பாப்(ரலி) அவர்கள், நஸாயி 10224

# பாவமன்னிப்புத் துஆக்கள் 6

## நபி(ﷺ)அவர்கள் கேட்ட துஆ

رَبِّ اغْفِرْ لِي، وَتُبْ عَلَيَّ، إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيمُ

ரப்பிக்(ஃ)பிர்லீ வதுப் அலய்ய
இன்னக அன்த்த தவ்வாபுர் ரஹீம்

என் இறைவா என்னை மன்னிப்பாயாக என்னை(க் கருணையுடன் நோக்கி என் பிழைகளை) மன்னிப்பாயாக! நிச்சயமாக நீயே மிக்க மன்னிப்போனும், அளவிலா அன்புடையோனாகவும் இருக்கின்றாய்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அவர்கள், அபூதாவுத் 1518